# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி: 2019 மேழம் (30-4-1988) ஓர் உருபா (இதழ் எண்: 103)


## எரிவதைத் தடுக்காமல் கொதிப்பை அடக்க முடியாது!

## ஆட்சியாளர் கொடுமையும் பணமுதலைகள் கொள்ளையடிப்பும் அளவுக்கு மீறிவிட்டன!

## எனவேதான் இளைஞர்கள் வெகுண்டு எழுகின்றனர்!

## இந்தியத் தேசியம் என்றால் இந்துமத ஆளுமை, பார்ப்பனீயத் தலைமை, முதலாளிய வல்லாண்மை -- என்பதே பொருளாகும்!

## உழைக்கும் மக்கள் ஒருங்கிணைந்து எழுச்சி கொண்டாலொழிய தில்லி வல்லாண்மையை வீழ்த்துவது அரிது!

தமிழீழம் அமைய வேண்டுமானால், தமிழ் நாட்டில் இந்திரா கட்சி எதிர்க்கட்சியாகக் கூட வரக்கூடாது! தமிழர்கள் விழிப்பாய் இருக்க வேண்டும்!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# செய்திகள் -- சிந்தனைகள்:-

11-4-88 இரவு 7-30 மணியளவில் கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்தைத் தகர்க்க வந்த இரண்டு இளைஞர்களில் திருச்சியைச் சேர்ந்த மாறன் என்ற 20 அகவை இளைஞர் ஒருவர். மற்றவர் கரூரைச் சேர்ந்த இளங்கோவன் என்ற 19 அகவை இளைஞர்.

மாறன் இறந்தார்; மற்றவர் காயமடைந்தார். இவர்கள் தமிழரசன் இயக்கத்தைச் சார்ந்தவர்களாம். (தினமணி 13-4-88).

O இளைய தலைமுறை இப்படி முடிவெடுக்க — மூத்த தலைகளே நாணல்வேண்டும்! விளைய வருகின்ற குற்றங்கள் விளையக் காரணம்: அடிப்படை போடும் கல்வியின் குற்றம்; மேலெழும் ஆட்சி மேட்டிமைத் தனங்கள்; உலாவும் ஊழல்கள்; உருப்படியில்லாத வாழ்க்கை நெறிகள்; உண்மைக்குத் திரைகள்; பொய்மைக்கு வாழ்க்கை!

திருச்சியிலிருந்து உப்பு அறப்போராட்ட நினைவுச் செலவு திருமறைக்காடு நோக்கிப் போகிறது. 58 ஆண்டுகளுக்கு முன்பும் பின்பும்.

O அறப்போர் விளம்பரம், அடிமைகளாய் வாழ்ந்தோம் நாம்; இன்று உரிமைக்குரியவர் ஆனோம் என்கின்றனர். உப்புவணிகம் மொத்தமாய் வணிகமுதலைகள் கையிலே உரிமையும். அப்படியேயானால், உப்புக்கல்லுக்கும் உதவாமல் போனதிந்த விடுதலையெனப் புலம்புகின்றனர் மக்களே!

பாகிச்தானில் வெடிச் சுரங்கத் தகர்வில் ஆயிரம்பேர் இறந்தனர். — செய்தி

O கொலைவெறிக்கான கருவிகளை, வெடிகளை விளைப்பதே வணிகமாய்ச் செய்கின்றீர். அதன். விளைவால் அழிக்கின்றீர் மக்களையே ஆராய்வீர்; நன்னெறியே!

கூடங்குளம் அருகே ஆலந்து நாட்டுப் பெண் ஒருத்தி கற்பழிக்கப்பட்டுள்ளாள். உலக நாடுகளைச் சுற்றி வந்தவள். ஏன்? இலங்கையில் பறிபோகாத கற்பு, பாகிச்தானில் பறிக்கப்படாத கற்பு, கற்பைப் பெரிதாகப் போற்றும் தமிழகத்தில் தமிழ் மண்ணில் ஒரு வெளிநாட்டுப் பெண்ணின் கற்பைச் சூறையாடியுள்ளான் ஒரு முரடன். நோக்கில் உயர்ந்தவள் அவள்; இவனோ அழி மூடன். பொறுப்புணர்வற்ற அந்த முரடனின் செயல் தமிழர்க்குத் தலைக்குனிவாகும். கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்கவுள்ளனர். இதனால், வெளிநாட்டுப் பிடியில் தமிழகமும் சிக்கும்; சுற்றுப்புறச் சூழல்கெடும்; மக்கள் தாக்கத்துக்கு உள்ளாவர் என்கின்றனர். வெளிநாட்டு மூலமுதல் நம் உரிமையை — தன்மானத்தைக் கொள்ளை கொள்வதா எனக் கேட்கும் நமக்குப் பிறநாட்டுப் பெண்ணுரிமையினைச் சூறையிட எந்தத் திமிர் மூடம் காரணமானது? பெண்ணை இழிவாகப் பார்க்கும் ஆண்கள் தமிழகத்தில் அதிகமே! அதனாலேயே, 'பெண்ணிழிவுப்' பேச்சுகள் தமிழகத்து மேடையை 'அழகு' செய்கின்றன!

O உரிமை பறிப்பது — தனி மாந்தர்க்குள்ள தகுதி நிலைப்பது — மகளிர் சிறப்பை மிதிப்பது எவ்வகை யாலும் — தமிழர் எதிர்த்தற் குரியது!

தினகரன் 14-4-88. செய்தி கூடங்குளம் அருகே உலகம் சுற்றிவரும் ஆலந்து நாட்டுப் பெண் கற்பழிக்கப்பட்டாள் என்கிறது.

பேராயக் கட்சியின் தலைவர் திரு. கருப்பையா — இவரை 'மூப்பனார்' என்றே அழைக்கின்றனர். சாதிவால் இப்படிப் பெருந்தலைவர்கள் பேரில் விளம்பரம் ஆவது இழிவாகும்; தமிழர்க்குத் தீராப்பழியாகும்!

'மக்கள் நல மக்கள் விழிப்பு அமைப்பு' என்ற ஓரமைப்புக்கு அமைப்பாளர் சயேந்திரர். 'அறம், காத்தவனைக் காக்கும்' என்ற அறிவிப்போடு தொடங்குகிற அறிக்கைபற்றிப் பார்ப்போம்.

'எல்லாரும் மாற்றத்தை விரும்புகின்றனர்' என்றார் மார்க்சு. துறவிகளும், பழமைவாதிகளும் மாறுதலை விரும்புவது 'வியப்பான' செய்தியன்று!

O மக்களுக்குக் கொடுமை நீக்கம் — மதவேறுபாடு இருக்கலாம் — மதமாற்றம் கூடாது — இந்தியா ஒரே நாடு — மதத்தில் அரசியல் கூடாது — எல்லாரும் இறைவனின் மக்கள் — உணவு, உடை, வீடு இவற்றில் தேசியத்தன்மை வேண்டும் — தாய்மொழியில் பயிற்சி தருதல் வேண்டும் —

இப்படித் தொடரும் கருத்துகள், மக்களை நோக்கியே கூறப்படுகின்றன. இவை, முரண்பட்ட கருத்துகள். 'தாய்மொழி', 'தேசியம்' பற்றிய சிந்தனை, ஒருமையுள்ள இந்தியாவை உருவாக்க எப்படி உதவும்? தடையாகும்? 'அரசியல்' எங்கும் உள்ளபோது, மதத்தில் மட்டும் அரசியல் புகாமல் எப்படிப் போகும்? மக்களே தீர்வுகாண வல்லவர்கள் என்பதைக் புரிந்து கொண்டால் சரியே, 'அறம்' பற்றிய கருத்திலேயே தமிழர் இச் சமயத் தலைவர்களிடம் மாறுபடுவர் என்பதுறுதி!

இன்று, அக்னிவேத போன்ற துறவிகள் போர்க்கொடி உயர்த்திச் 'சதி' எனும் உடன் கட்டை ஏறும் வழக்கத்தையும், குழந்தைத் திருமணத்தையும் எதிர்ப்பதை நாம் கவனத்தில் கொள்வோம்! தனக்குள்ளேயே முரண்பட்டுப் பழமை தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முயல்கின்றது! காலத்தின் வளர்ச்சி இது!

— **பறம்பை அறிவன்.**

Scanned with CamScanner

இந்தியாவின் அரசியல் நிலைமை மிகக் கொடுமையானதாக மட்டுமன்று, மிக மிகக் கீழ்மையுடையதாகவும் ஆகிவிட்டது. மக்கள் ஒவ்வொரு நாளும் ஏதாகிலும் இரண்டு மூன்று இடங்களில் கொடிய அடக்கு முறைக்கும், கொலைகள் கொள்ளைகளுக்கும், துமுக்கி (துப்பாக்கி)ச் சூட்டிற்கும் ஆளாகுகிறார்கள். இந்திராக் கட்சியின் அடக்கு முறைகளும் ஆணவ அதிகார வெறித்தனங்களும் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கின்றன. பண வலிமையும் அதிகாரமும் கைகோத்துக் கொண்டு நாட்டை அலைக்கழிக்கின்றன. ஏழை மக்கள் கேள்வி கேட்பாரற்றுக் காவல் துறையினராலும், படைத்துறையினராலும் சுட்டுப் பொசுக்கப்படுகின்றனர். எந்த வகைக் காரணமும் இன்றி — ஆளுங்கட்சிக் காரர்களாக இல்லை என்ற ஒரே ஒரு காரணத்திற்காக மட்டுமே — அவர்கள் இவ்வாறு துன்புறுத்தப் படுகிறார்கள் என்று தெரிய வருகிறது.

அரசுக்கு எதிராக அன்று, ஆளுங்கட்சிக்கு எதிராகவும், அல்லது தனிப்பட்ட முறையில் அக்கட்சியில் உள்ள யாருக்கு எதிராகவும் நடந்தாலும் கூட, அவ்வாறு நடப்பவர்கள் **'மக்கள் பகை ஆற்றல்கள்'** (மக்கள் விரோத சக்திகள்) அல்லது **குமுகாய எதிர்ப்பு ஆற்றல்கள்** (சமூக விரோத சக்திகள்), **தேசிய இனப்பகைவர்கள், நச்சுத்தன்மை கொண்டவர்கள்** (விஷமிகள்) என்றவாறு பட்டம் சூட்டப் பெற்று, அவர்களைக் காவல்துறையினர் தளைப்படுத்தவும் கொடுமை செய்யவும் முற்பட்டு விடுகின்றனர். இவ்வகையில் ஆட்சியாளர் கொடுமையும் பணமுதலைகள் கொள்ளையடிப்பும் அளவுக்கு மீறி விட்டன. அரசு அதிகாரிகள் எல்லாரும் தங்களின் இயல்பான சட்டமுறை நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டு, ஆளுங்கட்சியில் உள்ள ஓர் எளிய தொண்டனுக்கும் தொண்டர்களாய் இயங்கத் தொடங்கி விட்டனர். நடுநிலையாக நடக்க வேண்டிய அறமன்றங்களும் நடுவர்களும் கூட அரசுக்கும் ஆளும் கட்சியினர்க்கும் அஞ்சிக்கொண்டு, குடியாட்சி அமைப்பு முறைகளையும் நாயத்துறை நேர்மைகளையும் குழிதோண்டிப் புதைத்து விட்டன.

இந் நிலைகளையெல்லாம் எதிர்க்கட்சிக் காரர்கள் கூட தட்டிக் கேட்க முடியாதபடி நிலை மிகக் கீழாகப் போய் விட்டது. அரசியல் நிலையில் தங்களுக்கு ஒத்து வராத, இணங்கிப் போகாத மாநில அரசுகளை, நடுவணரசு கொஞ்சமும் தயக்கமின்றிக் கவிழ்க்கத் தொடங்கி விட்டது.

நாட்டின் பொருளியல் நிலையோ, அரசியல் நிலையை விட மிகவும் கேடாகப் போய்விட்டது. யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பொதுமக்களைக் கொள்ளையடிக்கலாம்; அவர்களிடமிருந்து கையூட்டு, பணிக்கொடை, தொண்டுக் கட்டணம் (சேவைக்கட்டணம்), அன்பளிப்பு என்னும் பெயர்களில், பள்ளிகள், கல்லூரிகள், நகராட்சி அமைப்புகள், வாரியங்கள், ஆட்சித்துறை அலுவலகங்கள், காவல்துறை, போக்குவரத்துத்துறை இன்னோரன்ன அனைத்து நிலைகளிலும் பணங்களை அளவுக்கு மீறிச் சுரண்டலாம், கொள்ளையடிக்கலாம், கொழுக்கலாம் என்றாகி விட்டது. இவற்றை எவரும் கேட்க முடியாதவாறு ஒருவர்க் கொருவர், ஒருதுறைக்கு ஒருதுறை மிகக் கவனமாகவும் இணக்கமாகவும் நடந்து கொள்வது, அலுவலக நடைமுறைகளிலேயே ஒன்றாகி விட்டது.

மக்களின் இன்றியமையாத தேவைக்கான உண்ணு பொருள்கள், உடுத்தற் பொருள்கள், உறையுள்கள் ஆகியவை அளவுக்கு மீறி, ஏழை மக்களின் கைகளுக்கு எட்டாதவாறும், கிட்டாதவாறும் விலையேற்ற மலைகளில் ஏறி அமர்ந்து விட்டன. அன்றாடம் தங்கள் உடலை வருத்தி வாழ்கின்ற வறுமை மக்களும், ஏழை உழவர்களும், இக் கடுமையான விலையேற்றங்களால் நசுக்குண்டு நலிந்து அங்கங்கு அழியத் தொடங்கி விட்டனர்.

இவையன்றிப் பொழுதுபோக்குகள் என்னும் தன்மையில் கீழ்மையும் கயமையும் முதலாளியக் கோட்பாடுகளும் ஒன்றிணைந்து பூத வடிவாக மக்களை அச்சுறுத்திக் கொண்டுள்ளன.

இவ்வனைத்துச் சீரழிவுகளையும் கொடுமைகளையும் கண்டு கண்டு எண்ணி எண்ணிப் புழுங்கிய இளமை மனங்கள், — இளைஞர்கள் — தங்களால் மேலும் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களாகி, இவ்வழிம்புகளுக்கெல்லாம் ஆக்கமாகவும் ஊக்கமாகவும் உரமாகவும் இருக்கின்ற முதலாளியப் — பார்ப்பனிய நடுவண் அரசுடன் முரண்பட்டு எழுச்சி கொண்டு எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் வகையில், ஆங்காங்கே வெகுண்டு எழுந்து அரசுடன் போராடத் தொடங்கி விட்டனர். தங்கள் கைகளில் கிடைத்த போர்க் கருவிகளை அரசின் அலுவலகங்களின் மேலும், ஆட்சியாளர்களின் மேலும், அவர்கள் பரம்பரையினர் மேலும் வீசத் தொடங்கித் தங்கள் வெறுப்புகளைக் காட்ட முற்பட்டு விட்டனர். இவர்களை அமைதிப் படுத்தவோ அடக்கவோ வேண்டுமானால் அரசுச் சார்பில் நடைபெறும் அத்தனை இழுக்கல்களையும் சறுக்கல்களையும் சரிப்படுத்த அரசுத்தலைமை முன்வரவேண்டும். எரிவதைத் தடுத்தால் கொதிப்பு அடங்கி விடுகிறது. அதைச் செய்ய முன்வராமல், இவ் விளைஞர்களை அரசு 'நக்சலைட்டி'னர் என்றும் இந்திய ஒருமைப் பாட்டிற்கும், தேசிய வுணர்வுக்கும், பகைவர்கள் என்றும், பிரிவினைக்காரர்கள் என்றும் குற்றஞ்சாட்டிக் கொள்ளை முதலாளிகளை

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

# காஞ்சி, சங்கராச்சாரியின் காட்சி வண்ணங்கள்!

உலகமெலாம் வாழவும், உலகமக்கள் அனைத்து உரிமைகளையும், நலன்களையும் பெறவும், சாதி சமய வேறுபாடுகள் வேரோடு ஒழியவும் — காஞ்சியில் இருந்து சங்ராச்சாரிகள் "புனிதப் பயணம்" மேற்கொள்வது உண்டு. நான்கு வேதங்களும் அதற்கு ஏற்ப அமைந்த நான்கு சங்கர மடங்களையும் கடந்து ஐந்தாவது சங்கர மடம் (ஐந்தாம் மடம் அன்று! ஐந்தாம் படை மடம் அது) காஞ்சியில் இருப்பது நாம் அறிந்ததே.

அங்கிருந்து வழக்கம் போல இரண்டாம் சங்கராச்சாரி (செயந்திர சரசுவதி) உலகநலங் காக்க ஒருமுறை புறப்பட்டார். புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வந்தார். மூன்றுநாள் நிகழ்ச்சிகள், குடமுழுக்கு, "ஆன்மிக" மாநாடு, பொதும் கூட்டம், கலந்துரையாடல், எல்லாவற்றிற்கும் மேலாக "சனசல்யாண், சனசாக்ரன்" அமைப்பு நிகழ்ச்சிகள்தாம் முகாமையான இடத்தைப் பிடித்திருந்தன.

"கரையான் புற்றெடுக்க, கருநாகம் குடிகொண்டது" என்ற மொழி நமக்குத் தெரியும். ஆனுல் அதைப் பொன்னமராவதியில்தான் உணர முடிந்தது. குடமுழுக்கு விழாவும், விழாவினை ஒட்டிக் கவியரங்கமும் நடந்தன. இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள தமிழாசிரியர்கள் அமைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் என் நண்பர் கும. திருப்பதியும் ஒருவர். சொப்பனு பட்டி உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றுகிருர். தென்மொழி அன்பர்.

குடமுழுக்கு விழா நிகழ்ச்சியினை நேர்முக வண்ணனை செய்த நான்கு தமிழாசிரியர்களில் நண்பர் திருப்பதியும் ஒருவர். நல்லமுறையில் தனது பங்கினைச் செலுத்தினுர். பாராட்டும் பெற்ருர்.

பின்னர் பாட்டரங்கம் நடந்தது. பாட்டரங்கில் கலந்து கொண்டவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தலைப்பு, ஒருவருக்கு — **கோபுரம்** மற்றொருவருக்கு **"கர்பக் கிரகம்"**, இன்னொருவருக்கு **"கொடிக்கம்பம்"** அதுபோல நண்பருக்கு **"நுழைவாயில்"**.

கலந்து கொண்ட "தமிழாசிரியர்கள்" அனைவரும் முதலில் சங்கராச்சாரிக்கும், பின்னர் இறைவனுக்கும் வணக்கம் சொல்லிவிட்டுப் பின்னர் "பாமழை" பொழிந்தனர். நண்பர் ஒரு 'தவறு' செய்துவிட்டார். தொடக்கத்தில் தமிழ்தாய்க்கு வணக்கப்பாடலும் பின்னர் அவையோருக்கு வணக்கமும் தெரிவித்து விட்டுத் தனது பாவரங்க நிகழ்ச்சியினைத் தொடங்கினுர்.

தமது 'நுழைவாயில்' பாடலில், "அன்று நந்தனுரை அனுமதியாத நுழைவாயில் இன்றும் அனுமதிக்கவில்லையே" என்று வருந்தியும், குமுக அமைப்பைச் சாடியும் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டார்.

நண்பர், சங்கராச்சாரியின் கருத்துக்கு மாருக நடந்து கொண்டதால், திருப்பதியினர் உரையும், வண்ணனையும், பாட்டரங்க நிகழ்ச்சியும் வெட்டப் பட்டுப், 'பார்ப்பனதாசர்'களின் குரல் மட்டும் திருச்சி வானெலியில் ஒலிபரப்பப்பட்டது.

அடுத்து மூன்ரும் நாள் நிகழ்ச்சி சங்கராச்சாரி மக்களுக்கு "ஆசி" வழங்கிக் கொண்டு இருந்தார். அவரைப்பார்க்க "சனகல்யான்" இயக்கப் புதுக்கோட்டை மாவட்ட அமைப்பாளர் (பெயர் வேண்டாம்) சென்ருர். 'சன கல்யாண்' இயக்க அமைப்பாளராக அவர் அமர்த்தப்பட்டது நிகழ்ச்சியின் மூன்ரும்நாள்தான் அவருக்குத் தெரியும், நண்பர் திருப்பதியை அழைத்துக் கொண்டு சென்ருர். வரிசையில் நின்ருர். நின்றுகொண்டே இருந்தார். அவருக்குப் பின்வந்த 'அவாளெல்லாம்' உள்ளே போய்வந்தார்கள். அமைபபாளர் உள்ளே போக முடியவில்லை, ஏனெனில் அவர் 'தமிழர்'. காலம் கடந்தது. அமைப்பாளர் சினத்தின் உச்சிக்குச் சென்று விட்டார். விடுவிடு என்று திடுமென உள்ளே புகுந்தார்.

"சாமி வணக்கம்"

"சங்கராச்சாரி"

"நான் தான் சனகல்யாண் மாவட்ட அமைப்பாளர்"

"அப்படியா சந்தோசம்"

"வரிசையில் ஒரு மணி நேரமாக நின்று கொண்டிருக்கிறேன்"

"கூட்டம் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும் நீங்கள் நேரே வரலாமே"

"உங்கள் ஆட்கள் அனுமதிக்கவில்லை. ஆனுல் உங்களவர்கள் (பிராமணர்களை) மட்டும் உடனே அனுமதிக்கிருர்கள்"

"தெரியாமல் செய்து விட்டார்கள். இருந்தாலும் நீங்கள் நேரே வரலாம்."

"சனகல்யாண் அமைப்பாளருக்கே இந்நிலை என்ருல், ஏழை எளியவர்களின் நிலை என்னவாகும்? எங்களுக்கு நீண்ட அகப்பை மூலம் திருநீறு தருகிறீர்கள். ஆனல் உங்கள் ஆட்களுக்கு கையினுல் கொடுக்கிறீர்கள், உண்மையான உள்ளம் உங்களுக்கு இருக்குமேயானுல் எங்களுக்கும் கையினுல் கொடுப்பீர்களா?"

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின்

# செயலும் செயல் திறனும்

## வாழ்வியல் நூல் வெளியீட்டு விழா!

உ. த. மு. க முதல்வரும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களின் ஆசிரியருமாகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் எழுதிய மிகச் சிறந்த வாழ்வியல் நூலான 'செயலும் செயல் திறனும்' என்னும் நூல் வெளியீட்டு விழா சென்னை, அண்ணாசாலையிலுள்ள தேவநேயப் பாவாணர் நடுவண் நூலக அரங்கில் தி. பி. 2019 மீனம் 6. (19 3-1988) காரிக்கிழமை, மாலை 5 மணி அளவில் மிகச் சிறப்பாகச் செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழுவின் சார்பில் நடைபெற்றது.

உ. த. மு. க. துணைப்பொதுச் செயலர் தென்னவன்கோ அவர்கள் வெளியீட்டு விழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கும்படி வழக்கறிஞர் திரு. நல்லப்பன் அவர்களை அழைத்தார். திருவாட்டி. செந்தாமரை ஆறிறைவன் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. தென்னவன் கோ அவர்கள் தம் வரவேற்பு உரையில் அனைத்து அறிஞர்களையும் தமிழன்பர்களையும் வரவேற்று அமர்ந்தார்.

தலைவர் தம் முன்னுரையில் ஐயாவின் சிறப்புகளையும் அறிவாற்றல்களையும் புகழ்ந்து பேசினார், பின்னர் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் நூல் வெளியிடும் பொறுப்பை ஏற்றுப் பேசுகையில், ஐயாவிற்கு வாழ்க்கைத் துணையாக இருந்து கொண்டிருக்கும் தகுதி ஒன்றிற்காகவே எவ்வளவோ அறிஞர்கள் நாட்டில் இருந்தும் நூல் வெளியிடும் பொறுப்பைத் தமக்குத் தந்து பெருமை படுத்தியிருக்கிறார் என்றும், ஐயா அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், செப்பமும் செயல் திறத்துடனும் அமையும் என்றும் பலவாறு புகழ்ந்து பேசிய பின் திருவாளர்கள் திருக்குறள் மணி. புலவர் இறைக்குருவனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி மா. ஆறுமுகம், அறிஞர் தென்மொழி ந. முத்துக்குமரன், சொல்லாய்வுஅறிஞர் ப. அருளி ஆகிய நூல் பெற்றுக் கொள்வோர்களை, அவரவர் தகுதிகளைச் சொல்லி அழைத்து நூல்படிகளை வெளியிட்டார்.

திருவாளர்கள் அறிஞர். இல. க இரத்தினவேல், கடலூர் மணிமாறன், பாவலர் எழில்வாணன், வெற்றிவேல், புலவர், இறைக்குருவனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி மா. ஆறுமுகம், அறிஞர், தென்மொழி ந. முத்துக்குமரன், திருவாட்டி இறை. பொற்கொடி, பழ, கருப்பையா, பறம்பை. அறிவன், புலவர் கலியபெருமாள், திருக்குறள் பெருமாள், புலவர். குமர. தன்னொளியன், மா. செ. தமிழ்மணி, வா. மு. சேதுராமன், சொல்லாய்வு அறிஞர் ப. அருளி ஆகியோர் நூல் மதிப்புரை வழங்கினர்.

அறிஞர். இல. க இரத்தினவேல் தம் மதிப்புரையில், இந்நூல் மக்கள் நலத்துக்காக மன்பதைக்காக எழுந்தநூல் என்றும், இயங்கியல், கணக்கியல் இயற்பியல் தன்மைகளையுடைய அறிவு நூல் என்றும், இலெனின் கால உருசியாவைப் போலும் மாவோ காலச் சீனத்தைப் போலும், தமிழகத்தைப் பாவலரேறு ஆக்க விரும்புகிறார் என்றும் விளக்கினார்.

கடலூர் மணிமாறன் தம் மதிப்புரையில், இந்நூல் முழுமையான வாழ்வியல் இலக்கியத்தை அடியொற்றியது என்றும், பாவலரேறு நுட்பமாகவும், ஆழமாகவும், திருககுறளைக் கையாண்டிருக்கிறார் என்றும், மொழி, இனம், நாடு என்னும் முப்படி உயர்த்தும் முயற்சியில் 30 ஆண்டுகளாகப் பேசியும் எழுதியும் வருகிறார் என்றும், இன்றைய இளைஞர் எதிர்காலத் தமிழ்க்குமுகம், சீரழிவையெண்ணித் தடம் மாறாமல் திருக்குறள் நெறி வழுவாமல் வாழ்ந்தால் இன மீட்சி பெறுவதை நோக்கமாகக் கொண்டு எழுந்த நூல் என்றும் விளக்கினார்,

பாவலர் எழில்வாணன் தம் மதிப்புரையில் வள்ளுவர் உள்ளத்தைக் கண்டவரால் எழுதப்பட்ட நூல் என்றும், அரியவர் எனப் பெறுவோரும் எளிய செயலையே விரும்புகின்றனர். அவர்கள் இதனை படிக்க வேண்டும், என்றும் விளக்கினார்.

'செயலும் செயல் திறனும்' எழுதியதன் மூலம் செயற்பாட்டுக்கு நம்மை அழைக்கிறார் ஆசிரியர் என்று புலவர் இறைக் குருவனாரும், இனத்தையே சிந்தித்தவர், ஆக்கந்தருவன வற்றையே செய்தவர், பாவாணர்க்கு ஆக்கம் தந்தவர், பாவேந்தர் குடும்ப உதவி செய்தவர், ப. சு. வை வெளிக்கொணர்ந்தவர் பதின்கவனகர் இராமையா போன்ற அறிஞர்களை வெளிப்படுத்திக் காட்டியவர் பாவலரேறு ஐயா என்றும், சிறையில்தான் ஓய்வு கிடைக்கிறது. இறவா இலக்கியங்கள் பிறக்கின்றன, தனிநாடு கேட்கும் ஐயாவைச் சிறையிலடைத்து ஓய்வளிக்க வேண்டுகிறேன் என்றும், கருவிகள் தூக்க வேண்டிய நேரத்தில் நமக்குத் துணையாகச் செயலும் திறனும் நமக்குக் கிடைத்துள்ளது என்றும் பலவாறுகத் தென்மொழி ப. துரையரசன் தம் மதிப்புரையில் குறிப்பிட்டார்.

Scanned with CamScanner

மா. ஆறுமுகம் அவர்கள், தம் மதிப்புரையில் கனிச்சாறு போல இஃதொரு குறட்சாறு; திருக்குறளின் ஆட்சியே மாட்சி என்றும் பாவலரேறு அவர்கள் ஆசானாகக் கொள்கைநெறிப் படுத்துகிறார்; நண்பராகச் சோர்வை அகற்றுகிறார்; தாய் தந்தையராக அன்றாட வழிமுறை காட்டி வழி நடத்துகிறார் என்றும் விளக்கினார்.

அறிஞர் ந. முத்துக்குமரன் தம் மதிப்புரையில், ஆசிரியரே ஒரு நூலாக விளங்குகிறார்; வாழ்க்கையே பாடம், வாழ்க்கை முயற்சியே மீட்சியின் வெளிப்பாடாக இருக்கவேண்டும் என்பது நூலிலே ஊடாடுகின்றது; சார்பு இல்லாத சார்புநூல் என்றும் விளக்கினார்.

இறை பொற்கொடி தம் மதிப்புரையில், செயல் திறமுள்ளவர்கள் ஆடவர்களே யெனில் இன்று நாட்டில் அனைவரும் பெண்களே என்றும், செயல் திறம் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியதன்று. தாயே குழந்தைகளைச் செயல் திறமிக்கவர்களாக ஆக்கும் முதல் ஆசான் என்றும் உணர்வு பொங்க விளக்கினார்.

பழ. கருப்பையா தம் மதிப்புரையில் பாவலரேறு மக்களிடம் சென்று சேரவேண்டிய அறிஞர் என்றும், கழகக்காலப் புலவனின் பெயர்கொண்டு கழகக் கால வாழ்வு அமையாதா என ஏங்குபவர் ஐயா என்றும், மறைமலை, பெரியார் ஆகியோருக்குப் பின்னால் தமிழியக்கத்தின் தலைவராகப் பாவலரேறு உள்ளார் என்றும், நூல் வெளியீடு தமிழின விழா என்றும், நாமோ அடிமைகள். நாம் எப்படி ஈழத்தமிழருக்கு உதவமுடியும் என்றும் இன்னும் பலவாறாக உணர்வு பொங்க விளக்கி முடித்தார்.

மக்களைப் புரிந்து கொள்ளாமல் மார்க்சையும் புரட்சியையும் புரிந்து கொள்ள முடியாது; மக்களைப் புரிவதற்கும் புரட்சியை விளங்கிக் கொள்வதற்கும் இந்நூல் உதவுகிறது; தமிழ்த் தேசிய இனத்தை கட்டமைப்பதற்கானது இந்நூல்; விடுதலைக்கு வித்திடும் நூல்; முதலிய கருத்துகளை பறம்பை அறிவன் தம் மதிப்புரையில் வழங்கினார்.

புலவர் கலியபெருமாள் தம் மதிப்புரையில், பேசுவதைவிட செயலில் இறங்க வேண்டிய கால கட்டத்தில் இந்நூல் வெளிவந்துள்ளது; இந்தக் கால கட்டத்தின் முன்னோடி பாவலரேறு; பழம் பெருமைகளை, வரலாற்றைப் பேசிக் கொண்டிருக்கிறோம்; ஆனால் ஈழத்தில் 40 இலக்கம் பேர் நடத்துவது தான் வரலாறு; தமிழினத் தலைவர்கள் காய்ந்த விறகைப் பற்ற வைக்காமல் நீரைத் தெளித்துக் கொண்டிருக்கிறார்கள் முதலிய கருத்துகளை வழங்கினார்.

பின் திருக்குறள் பெருமாள் பாவலரேறுவின் பாடல்களை உணர்ச்சி பொங்க பாடினார்.

பொதுமைக் கருத்துகள் நிறைந்த நூல் என்று புலவர் தன்னொளியனும்; பாவலரேறு மக்கள் தொண்டர் என்று மா. செ. தமிழ் மணியும், பாவலரேறு அஞ்சாமையுள்ளவர், குடும்பத்தையே தமிழுக்கென ஈடுபடுத்திய பெரும் புலவர் என்று வா. மு. சேதுராமன் அவர்களும் பேசினர்.

கடைசியாக அருளி அவர்கள் தம் மதிப்புரையில் செயலைப் பற்றிய தலைப்பில் இதுவே முதல்நூல்; ஆங்கிலத்திலும் இந்த அளவுக்கு இல்லை, என்று நூலில் பல இடங்களில் மேற்கோள்களை காட்டி உரையாற்றினார்.

இளமாறன் நன்றி சொல்ல, ஈகவரசனின் தமிழின ஒருங்கிணைப்புப் பாடலுடன் நிகழ்ச்சி முடிவுற்றது. — செய்தி. துரை. தென்னவன்.

# நினைவில்...!

ஆக 15, 1987-இல் கேரளத்தில் 'தேசஒற்றுமை காப்போம்' என்று 'மக்கள் தொடரி' நடத்திய இ. பொ. க. (மா) வினர், தம் செய்தியேடுகளில் படம்போட்டுப் பெரிது பண்ணினர். அவர்கள் இந்த வகையில் 'விவேகானந்தர் கேந்திரம்', இந்திரா பேராயம் இரண்டோடும் ஒன்றுபட்டே யுள்ளனர்!

ஆனால், புதிய கல்விக் கொள்கை, போன்ற நடைமுறைக் கொள்கைகளில் இ. பொ. க. (மா), இந்திரா பேராயத்துடன் மாறுபட்டிருப்பதாகத் தோற்றம் தருகிறது. உள்ளடககத்தில், இந்திரா பேராயம் பிடித்தமர்ந்துள்ள அரியணையில் அமரும் ஆர்வமே இ. பொ. க (மா) விடம் துளும்பி நிற்கிறது.

45 இலக்கம் உறுப்பினர் கொண்ட இளைஞர் இயக்கம் உடையவர்களாக இவர்கள் கூறிக்கொண்டாலும், புரட்சியின் பக்கம் சாய்ந்து விடாமல், 'நடுநிலை'யோடு இந்திரா பேராய ஆட்சியை அரசியல் காரணமாகக் கவிழ்க்காமலிருப்பார்கள் என உறுதியாக நம்பலாம்!

"படித்துப் பாழாய்ப் போவதை விட ஆடு மேய்த்து ஆளாய்ப்போ" என்கிற மக்கள் மொழியிலிருந்து இவர்கள் கற்றுக் கொண்டது என்ன? புதிய கல்விப படிப்பு, ஆடுமேய்ப்பதை விடத் தாழ்வானது என்பதன்று. அது கேடானது; தீம்பானது. தேசிய இனவுரிமைக்கு எதிரானது என்பதையே மக்கள் மொழிகள் நமக்கு அடிக்கடி நினைவூட்டி நிற்கின்றன!

— பறம்பை அறிவன்.

Scanned with CamScanner

# தமிழக மக்களைக் கொல்லும் தில்லி அரசின் அணுக் கொ(ல்)ள்கை

இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலிருந்துதான் பலதரப்பட்ட பொருள்களைச் சுரண்டிக்கொண்டு செல்கிறது இந்திய அரசு.

ஒவ்வொரு தேசிய இனத்திடமிருந்தும் ஒரு சில பொருள்கள் மட்டுமே சுரண்டப்படுகிறது இந்தியாவால். ஆனால், தமிழ்நாட்டிலிருந்து விளைச்சல் பொருள்கள், கனிவளங்கள் மக்கள் உழைப்பு — இவற்றினோடு மக்கள் உழைப்பால் கிடைத்த பயன்கள் எல்லாம் ஒட்டச் சுரண்டப்படுகின்றன.

இதுபோலும் பொருள்களைச் சுரண்டுவதோடு மட்டும் இல்லாமல், தமிழகத்திற்குப் பெரும்பாலான தாக்கங்கள் ஏற்படுத்துவதிலும் இந்திய அதிகார வகுப்பு செயல்படுகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் மின் உருவாக்கம் நிறைய இருக்கின்ற போதிலும், அதைத் தமிழர்களால் பயன்படுத்த முடியாதபடி இந்திய அதிகார வகுப்பு தடை செய்துகொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 19-நீர்மின் நிலையங்களும், 3-அனல்மின் நிலையங்களும் - தமிழக அரசுக்குச் சொந்தமானவையாக உள்ளன. மற்ற 4-மின நிலையங்கள் இந்திய அரசின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளன.

இவற்றில் 19-நீர்மின் நிலையங்களில் இருந்தும் ஏறத்தாழ 2936 பத்திலக்கம் (மில்லியன்) அளவி (யூனிட்) மின்சாரம் கிடைக்கிறது. இவை தமிழகத்திற்குப் பயன்படுகிறது.

3-அனல்மின் நிலையங்களிலிருந்தும் கிடைக்கின்ற மின்சாரத்தில் அண்டை மாநிலங்களுக்கு அனுப்பியது போக 5695.8 பத்திலக்கம் அளவிகள் (மில்லியன் யூனிட்டுகள்) மட்டுமே தமிழ்நாட்டுக்குக் கொடுக்கப்படுகின்றன.

இவையல்லாமல், தமிழ்நாட்டு நெய்வேலி அனல்மின் நிலையமும், கல்பாக்கம் அணுமின் நிலையமும் மின்உருவாக்கம் செய்கின்றன.

இதில் 4,722.5 பத்திலக்கம் அளவி (மில்லியன்யூனிட்டு)கள் மட்டும், ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி மட்டும் — தமிழகத்திற்கு இந்திய அரசால் விற்பனை செய்யப்படுகிறது.

இதற்குப் பகரமாக விளைச்சல் பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறது இந்திய அரசு. இந்தக் கொடிய நிலைகளைச் சிறிது ஆழமாகப் பார்த்தால் நமக்கு முழு உண்மை கிடைக்கும்.

தமிழ்நாட்டின் மூலப்பொருள்களைக் கொண்டே தமிழ்நாட்டு மின்சாரம் உருவாக்கப்படுகின்றது. அதற்கான உடல் உழைப்பைச் செய்கிறவர்களும் தமிழ் உழைப்பாளர்களே. ஆனால் முழுக்கச் சுரண்டிக் கொண்டு போகிறவன் இந்திய அரசுக்காரனே.

தமிழ்நாடு 70-விழுக்காடு உழவுத் தொழிலையே நம்பி வாழ்கிறது. ஆனால் உழவுக்கு அரசு ஒதுக்கிடும் மின் அளவு 26.80 விழுக்காட்டு அளவே. இந்த நிலையில் மிகக்குறைந்த மின்சாரம் கொடுக்கப்படுவதால் இரவு நேரங்களில் மட்டும் மின்சாரத்தைப் பெற்று, மிகவும் தொல்லைப்படுகின்றனர்.

பகல் நேரங்களில் மின்சாரம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அதேபோல இங்குள்ள சிறு முதலாளிகளுக்கும், மின்சாரத்தைக் கட்டுப்படுத்திக் கொடுப்பதும், அவர்களிடம் மின் கட்டணத்தைக் கூட்டி வாங்குவதும் தமிழ்நாட்டு நலத்தை நசுக்குகின்றன.

மேலும், அனல்மின் நிலையம் என்கிற பெயரில் வேறு கொள்ளையடிக்கின்றது இந்திய அரசு.

சென்னை எண்ணூர் அனல்மின் நிலையத்திலிருந்து புகை மிக அதிகமாக வருவதால், அங்குள்ள மக்களுக்குச் சிலநேரங்களில் மூச்சடைப்பு போன்ற உடல் நலக்கேடுகள் வருவதாகச் சில இதழ்களில் செய்திகள் கடந்த சில காலங்களாக வந்து கொண்டிருந்தன. ஏன் இப்படித் திடுமென ஏற்படுகிறது என்பது அவ்வூர் மக்களுக்குத் தெரியாத புதிராக இருந்தது.

அந்த ஊர்ப் பகுதியில் பயிர்கள் சரிவர வளர்வதில்லை. அப்பகுதியிலுள்ள வீடுகள், நிலங்கள் மண் மீதெல்லாம் கருப்புப் படிவு படிந்து கிடக்கின்றது. இதற்குரிய காரணம் மிகவும் அதிர்ச்சி தரக்கூடியது.

சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இந்த நிலை இல்லை. கடந்த இரண்டாண்டுகளாகத்தான் இந்தக் கொடிய நிலை உள்ளது. இரண்டாண்டிற்கு முன்னர் இந் நிலையத்திற்கு ஆத்திரேலியாவிலிருந்து நிலக்கரி வாங்கப்பெற்றது.

ஆத்திரேலியாவிலிருந்து வாங்கப்பெற்ற அந் நிலக்கரியின் விலை ஒரு கல்லெடை (டன்) உரு 600 மட்டும்தான். மேலும், அஃது உயர்தரமான நிலக்கரியுமாகும். அந்த நிலக்கரி பயன்பாட்டில் இருந்தபொழுது இதுபோலும் புகைத் தொல்லையே இல்லை

மேலும், அந்த நிலக்கரி பயன்படுத்திய பொழுது நிலையத்தின் கொதிகலன் எவ்வகைப் பழுதும் ஏற்படாமல் சிறப்பாக வேலை செய்தது.

ஆனால் இப்பொழுது, இந்த இரண்டு ஆண்டுகளாய் பீகாரிலிருந்து நிலக்கரி வருகிறது. இந்த

நிலையத்திற்கு. அதன் விலையும் ஒரு கல்லெடை (டன்) உரு. 2000, இந்த நிலக்கரியுடன் ஏறத்தாழ கல்லெடை (டன்) 1-க்கு 50கி.கி.கல் கலக்கப் பெற்றிருக்கிறது.

இந்த நிலக்கரி பயன்படுத்தத் தொடங்கியே இவ்வகைப் புகையும் மூச்சடைப்புக் காற்றும் வரத் தொடங்கின.

மேலும் இந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதினால் அனல் மின் நிலையக் கொதிகலன் அடிக்கடி பழுதடைகின்றது.

ஆறு மாதத்திற்கு ஒரு முறை அதன் பழுது பார்ப்புச் செலவு வேறு மிகுமின் தொழிலகத்திற்கு (BHEL) வரவாகப் போகிறது.

இங்ஙனம் இந்திய நாட்டு ஒற்றுமை என்று வறட்டுக் கத்துக் கத்திக் கொண்டிருக்கிற அரசு, பிகார் நிலக்கரிக்கு விற்பனைச் சந்தை தேடியும் BHEL தொழிலகத்திற்கு வேலை கொடுக்க வேண்டியும் செய்கிற அதிகார வெறித்தனத்தால் அழிபடுவது தமிழன் தான். தமிழக மக்கள் தாம் அல்லலபடுகின்றனர்.

அதுமட்டும் இல்லாமல் நெய்வேலியில் இரு அனல்மின் நிலையங்கள், கல்பாக்கம் அணுமின் நிலையங்கள் வழி பெரும்பகுதி மின்சாரம் இந்திய அரசுக்கே தாரை வார்க்கப்படுகின்றது.

உயிரைப் பணயம் வைத்து உருவாக்கப்படும் கல்பாக்கம் அணுமின் நிலைய உருவாக்கம் நமக்கு இல்லை. உலகமே கைவிட்டு விட்ட அணுமின் கொள்கையை, இந்த இந்தியா தூக்கி வைத்துக் கொண்டு இந்தியா வாழ் மக்களைக் கொல்வதற்கென்றே உள்ள வகையில் இந்த அணுமின் நிலையங்களும் செயல்படுகின்றன.

சோவியத்து உருசியா சுரண்டிச் செல்வதற்காக அதன் உதவியால் அமைக்கப்பட்டதே இந்த அணுமின் நிலையங்கள்.

தன் நாட்டில் தடை செய்துள்ள சோவியத்து உருசியா, இந்த அணுமின் நிலையத்தை இந்தியாவில் திணித்து வைத்துள்ளது.

இதுவரை 5 முறை அமெரிக்காவிலும், 3 முறை சோவியத்து ஒன்றியத்திலும் அணுமின் நிலைய வெடிப்பின் மூலம் கடுமையான இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்தியாவில் மட்டும், மூன்று இடங்களில் இராசத்தானிலும், பம்பாய்க்கு அருகிலும், சென்னைக்கு அருகில் கல்பாக்கத்திலும் இந்த அணுமின் நிலையங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதற்குப் பகரமாக சோவியத்து உருசியாக்காரன் ஏராளமான பழவகைகள், விளைச்சல் பொருள்களை இங்கிருந்து மூட்டைக் கட்டிக் கொண்டு எடுத்துச் சென்றுள்ளான்.

இருக்கின்ற ஏழ்மை போதாதென்று எமனை வேறு இடுப்பில் கட்டிக் கொண்டு உலாவுகின்றனர் இந்தக் கல்பாக்கம மக்கள்.

அந்த மின் நிலையம் அங்கு கொண்டுவந்த பிறகு பல நோய்கள் அந்தப் பகுதி மக்களைத் தாக்கியுள்ளன.

அந்நோய்களால் மிகுந்த தொல்லைப்படுகின்றனர் அம் மக்கள். தொழிலகம் அங்கு வந்ததிலேயே, அதன் கழிவுப்புகையிலேயே இந்த நோய்கள் என்றால், அந்த அணுமின் நிலையத்தில் கசிவு ஏற்பட்டால், சென்னை, செங்கல்பட்டு வாழ்மக்கள் அத்தனைப் பேரும் கொல்லப்படுவது உறுதி.

மேலும் அதன் கழிவுநீர் கடலில் கலக்கப்படுவதால் ஏராளமான மீன்கள் சாகடிக்கப்படுகின்றன. சென்னை, செங்கல்பட்டு மாவட்டக் கடல் பகுதிகளில் மீன்பிடிப்பு வெகுவாகக் குறைந்துவிட்டது. இதைச் செய்யவே இந்த இந்திய அரசு நாம் கேட்காமலேயே நமக்குத் தேவையில்லாமலேயே அந்த அணுமின் நிலையத்தைக் கொண்டு வந்து வைத்துள்ளது. இத்தனைத் தாக்கங்களையும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மீது சுமத்திவிட்டுத் தமிழ் மக்களின் உழைப்பால் கிடைக்கிற மின்சாரத்தையும் இந்த இந்திய அரசு சுரண்டிக் கொண்டு செல்வது - பச்சை அரம்பத்தனம். - பகற்கொள்ளை - தன் நாட்டு மக்களையே கொல்லுகிற கொடிய தன்மை - தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக மாற்றுவது அல்லாமல் வேறு இல்லை.

இதோடு அல்லாமல். தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அமைக்கப்பட வேண்டிய, தமிழ் மக்களின் நலனுக்குத் தேவையான எத்தனையோ தொழிலகங்கள் தேவையாய் இருக்க, தமிழ்நாட்டு - நெல்லையில் இன்னுமோர் அணுமின் நிலையத்தைத் திறக்கத் திட்டமிட்டு இன்னும் ஓரிரு மாதங்களில் திறக்க உள்ளது, இந்த இந்திய அதிகார வெறிபிடித்த அரசு. எப்படி!

போபாலில் நடந்தது போல, தமிழ் மக்களை முழுமையாகக் கொன்று குவிக்கும் திட்டமாக இ'து உள்ளதே அல்லாமல் வேறு என்ன?

இந்த நிலைகளை முழுமையாக உணர்ந்து கல்பாக்கம், நெல்லை அணுமின் நிலையங்களைத் தூக்கி எறிவதோடு மட்டும் அல்லாமல், இதையெல்லாம் திணிக்கின்ற, தமிழனை இரண்டாந்தரக் குடிமகனாக மாற்றுகிற, தமிழ்நாட்டுப் பொருள்களைச் சுரண்டிக் கொண்டு போகிற இந்திய அரசின் அதிகாரத்தையும், தூக்கி எறிவதாலேயே, தமிழ்நாடு முழு நிறைவோடு இருக்கும். உழைக்கும் தமிழ மக்களின் விடுதலை பேணப்படும். இல்லையேல், இந்திய ஆளும் வெறியர்களால், தோண்டப்படுகிற சுடுகாட்டிற்குள் தமிழ்மக்கள் அனைவரும் புதைக்கப்படுவது உறுதி.

—நன்றி: **விடுதலைக் குரல்.**

Scanned with CamScanner

# "தமிழீழ மக்கள் விடுதலைப் புரட்சியும், இந்தி(ய) வல்லரசின் சூழ்ச்சிகளும்"

-- செ. அமிழ்தன். --

பண்டைத் தமிழர்கள் அரசுரிமைப் பெற்றவர்களாக வாழ்ந்து, தமக்கென மூன்று பெரும் நாடுகளைக் கொண்டிருந்தனர் என இலக்கியக் குறிப்புகளும், வரலாறும் எடுத்துரைக்கின்றன. அத்தகைய நாட்டுரிமையுடன் கூடிய அரசுரிமை அற்றவர்களாகவே இற்றைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தமக்கென அன்று கொண்டிருந்த உரிமைகள் அனைத்தையும் இன்று அயலவர் கைகளில் அடகுவைத்து வாழ்ந்து வருவதும் பண்டை வாழ்வியலுக்கு நேரெதிரான மாற்றமே. தமிழர்களின் உரிமைகளைக் கையகப்படுத்திக் கொண்ட அயலவர்கள் அவற்றை ஒடுக்கி அழித்து வருவதும் கண்கூடே. இந்நிலையில் அத்தமிழர்கள் தத்தம் உரிமைகளையும், உரிமை வழி உடைமைகளையும் மீட்டுத் தற்காத்துக் கொள்ள தமது வரலாற்று வழியிலான மரபுரிமையை, அஃதாவது தமது தேசியத் தன்மையைத் தம்மை ஒடுக்கி ஆட்கொண்டு வரும் அயலவர்களுக்கெதிரான போர்க் கருவியாகக் கையாளத் தொடங்குவதும் ஓர் இயற்பாடே. அவ்வகையில் எழும் அவர்களுடைய நாட்டுரிமை மீட்புப் போர் அத்தமிழ் மக்களின் விடுதலைப் போராக வடிவம் பெறுகிறது. அவ்விடுதலைப்போர் அவர்களை ஆட்கொண்டு ஒடுக்கி அழித்து வரும் அயலவர்களுக் கெதிராகக் கருவியேந்திய எதிர்ப்பு இயக்கந்தனைக் கருவியாக உருவாக்கிக் கொள்கிறது. இவ்வகையில் வளர்ச்சியடைந்து, கருவியேந்திய எதிர்ப்பு இயக்கங்களையும் உள்ளடக்கி எழுந்துள்ள ஈழத் தமிழ் மக்களின் ஓர் உரிமை மீட்புப் போர்தான் தமிழீழ மக்களின் விடுதலைப் புரட்சிப் போர்.

கி. பி. 17-ஆம் நூற்றுண்டில் தோன்றிய முதலாளிய விளைப்பு முறையில் முதன்மை பெற்றிருந்த ஆங்கிலேய அரசு, வல்லரசாக உருமாறி உலகின் பெரும் பகுதியை வன்கவர்ந்து தனது குடியேற்ற (Colonial) ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தது. அது காலூன்றிய இடங்களிலெல்லாம் முதலாளிய விளைப்பு (production) முறையைத் திணித்தது. அத் திணிப்பு அவ்வல்லரசின் சுரண்டலுக்கேற்ற வணிக அமைப்புகளையும், அவற்றின் ஆளுமையையும் உறுதிப் படுத்தியது. அவ்விளைவு முதலாளிய அமைப்பிற்கு மாறுபட்ட குமுகாய அமைப்பிலிருந்த மக்களை மிகவும் கொடூரமாக ஒடுக்கியது. எனவே வேறுபட்ட குமுகாய அமைப்புகளின் கீழ் வாழ்ந்து வந்த மக்கள் முதலாளிய அமைப்பு முறையின் கொடுமைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் ஆளாயினர். இதனுல் வெறுப்புற்ற அம் மக்கள் தங்களின் மீது ஆளுமை செலுத்தி, முதலாளிய விளைப்பு முறையைத் திணித்துத் தமது உழைப்பை உறிஞ்சிய ஆங்கில வந்தேறிகளுக்கு எதிராகப் போராட எழுந்தனர். இதன் கரணியமாக ஆங்கில வல்லரசுக் குட்பட்டிருந்த குடியேற்ற நாடுகளில் வந்தேறிய வல்லரசு எதிர்ப்பு இயக்கங்கள் மலரத் தொடங்கின. பின்பு அவை தேசிய விடுதலை இயக்கங்களாக உருப்பெற்றன. அவ்வகையிலேயே இந்தியத் துணைக் கண்டத்தில் இந்திய விடுதலைப் போரும், இலங்கைத் தீவத்தில் இலங்கை விடுதலைப் போரும் முகிழ்த்தெழுந்தன. இவ்வாறெழுந்த வல்லரசு எதிர்ப்பு விடுதலைப் போரில் இந்தியத் துணைக்கண்டத்தில் பல நாட்டின மக்களும் (Nationalities), இலங்கைத் தீவத்தில் ஈழத் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் இணைந்து போராடினர். அவ்வாறு வல்லரசை எதிர்த்துப் போராடிய ஈழத் தமிழ் மக்களின் தன்முற்றுறுதி '(சுயநிர்ணய)உரிமை' அடிப்படையிலான தனிநாட்டுரிமை மீட்புப் போர்தான் தமிழீழ தேசிய விடுதலைப்போர்.

ஆங்கில வல்லரசு இந்தியத் துணைக்கண்டத்திலும், இலங்கையிலும் கால் கொண்டிருந்த காலத்தில்தான் இரு வல்லரசு உலகப்போர்களும் எழுந்தன. முதல் உலகப்போரின் விளைவால் உருசியப் புரட்சி வெற்றி பெற்று உலகம் இரு பெரும் குமுகாய அமைப்புகளின் கீழ் திரண்டது. இதன் பிறகு இரண்டாம் உலகப்போர் 1938-இல் தொடங்கி 1945 வரை நீடித்தது. இவ் வுலகப் போரின் விளைவாக நேச நாடுகளுக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் கரணியமாகத் தனது குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை அளிக்கலாம் எனும் நிலைப்பாட்டை ஆங்கில வல்லரசியம் ஏற்றது அதன் வழி தெற்காசியப் பகுதியில் தனது குடியேற்ற நாடுகளாக இருந்து வரும் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் முழு விடுதலை அளிக்கலாம் எனும் முடிவுக்கு அவ் வல்லரசியம் ஆட்பட்டது. எனவே அந்நாடுகளில் தமக்குப் பக்கச் சார்புடைய ஆட்சி அமைப்புகளை உருவாக்குதன் மூலம், மேலும் அந்நாடுகளில் தனது சுரண்டலையும், வல்லரசுத் தன்மையையும் காத்துக் கொள்ள இயலும் என்பதைத் தீர்மானித்துத் தமக்கு ஏற்புடைய அமைப்புகளை அமைப்பதில் கவனஞ் செலுத்தியது. இதனுல் அவ்வல்லரசியம் இந்தியாவில் தமக்குப் பெரிதும் ஒத்துழைத்த பேராயத்-

தினரிடமும், இலங்கையில் தமக்குதவி புரிந்து வந்து சிங்கள இன வெறியர்களிடமும் தமது ஆட்சி அமைப்புகளைக் கையளித்து மாற்றிக் கொண்டது. இதனை அது அந்நாடுகளுக்குத் தன்னுரிமை (FREEDOM) அளித்து விட்டோம் எனவும் பீற்றிக் கொண்டது.

இவ்வாறு விடுதலை எனும் பெயரிலமைந்த ஆட்சி மாற்றங்களினால் இந்தியத் துணைக்கண்டத்தின் பல நாட்டின மக்கள் தில்லியின் ஆளுமை வெறியின் கொடும் பிடியிலும், இலங்கைத் தீவத்தின் ஈழததமிழர்கள் சிங்கள இனவெறியின் கையிலும் சிக்கி அடிமைகளாக வாழ்ந்து வரும் நிலை ஏற்பட்டது. எனவே தில்லியின் ஆளுமை வெறியை எதிர்த்தும், சிங்கள இனவெறியை எதிர்த்தும் நாட்டின உரிமைப் போர்கள் முகிழ்த்தெழுந்தன; முகிழ்த்தெழுகின்றன. அவ்வகையில் ஈழத் தமிழர்களிடையில் முகிழ்த்தெழுந்த தேசிய இன உரிமைப் போரே, 1972-இல் "தமிழீழத் தனி நாடு" எனும் கோரிக்கையாக வடிவம் பெற்றுத் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டமாக வளர்ச்சியுற்று, இன்றளவில் கருவியேந்திய எதிர்ப்பு இயக்கங்களின் தலைமையிலான விடுதலைப் போராக நடந்தேறி வருகிறது.

## சிங்கள இனவெறியும் ஈழந்தமிழர் தேசிய இனச் சிக்கலும்:

ஆங்கில வந்தேறிகள் இந்தியாவை விட்டு 1947-இல் வெளியேறிய போது எவ்வாறு தம்மால் துமுக்கி முனையில் ஒருங்கிணைக்கப்பட்ட பல நாட்டின மக்களின் உரிமைளை இந்தியப் பேரின வெறியின் கைகளில் தில்லியில் ஒப்படைத்துச் சென்றனரோ, அதே போன்று 1948-இல் இலங்கையை விட்டு வெளியேறும் போது, தாம் அங்கே கட்டுவித்திருந்த ஆட்சி அமைப்பையும், ஈழத்தமிழர்களின் உரிமைகளையும் சிங்களவர்களின் கையில் ஒப்படைத்து விட்டு வெளியேறினர். இதனால் இந்தியாவில் வாழும் பல நாட்டின மக்களும், தங்கள் உரிமைகளுக்குத் தில்லியின் காலடியில் மண்டியிடும் நிலை உருவானது போல், ஈழத் தமிழர்களுக்குச் சிங்களர்களிடம் கேட்டுப் பெறும் நிலைஉருவாகியது.

இவ்வகையில் ஈழத்தமிழர்களின் உரிமைகளை ஆங்கில வந்தேறிகளின் கையிலிருந்து தம் கைக்கு மாற்றிக் கொண்ட டி. எசு. சேனநாயகாவின் அரசு தமது இனவெறியின் தன்மையை அதே 1948-ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் நாளில் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்து நாடற்றவர்களாக மாற்றியதன் மூலம் வெளிப்படுத்திக் கொண்டது. இம் மலையகத் தமிழர்கள் ஆங்கில வந்தேறிகளால் வணிக விளைப்பு நோக்கத்திற்காக 1828-ஆம் ஆண்டளவில் தமிழகத்திலிருந்து கூலியுழைப்புக்கென கொண்டு செல்லப்பட்ட தமிழர்களின் வழி மரபினராகும். இவர்களே **"இந்திய வழி மரபினர்"** என்றழைக்கப் படுகின்றனர். இவர்களை நாட்டுரிமை அற்றவர்களாக மாற்றியதன் மூலம் தலையுயர்த்திய சிங்கள இனவெறி அப்போதே தமிழர்களின் அரத்தத்தைக் குடிக்க உறுதி பூண்டது. எனவே அடுத்த ஆண்டிலேயே (1849) அம் மலையக மக்களின் ஒப்போலை உரிமையையும் பறித்தது. இவ்வாறு வளர்ந்தெழுந்த சிங்கள இனவெறி ஈழத் தமிழர்களின் உரிமைகளையும் நசுக்கி அழிக்கத் தொடங்கியது. அதன் விளைவாக 1956-இல் **"சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி"** எனும் சட்டம் இயற்றப்பட்டு அனைத்துத் தமிழர்களையும் மொழியுரிமை அற்றோர்களாக ஆக்கியது. இதன் மூலம் அரசுப் பணிகளில் வீற்றிருந்த ஏராளமான தமிழர்கள் தமது பதவிகளை இழக்க நேரிட்டது.

## தரப்படுத்துதல்:

இவ்வாறு இனவெறி கொண்டு அரசியல் அதிகாரத்தின் மூலம் அனைத்துத் தமிழர்களையும் ஒடுக்கத்தொடங்கிய இலங்கையரசு, தமிழ் மாணர்வகளின் கல்வியுரிமையை 1970 இல் **"தரப்படுத்துதல்"** எனும் முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம் பறித்தது. இதனால் தமிழ் மாணவர்களும். இளைஞர்களும் சிங்கள இனவெறி அரசுக்கெதிராகக் கிளர்ந்து போராடத் துவங்கினர்கள் இந் நிலையில்தான் சிங்கள மக்களிடையே கால் கொண்டிருந்த ஓர் இடது சாரி இயக்கம் 1971-இல் கருவியேந்திய கிளர்ச்சி ஒன்றை நடத்தியது. அதை அக் காலத்திலிருந்த இலங்கையரசு இந்தியப் படையினரின் உதவி கொண்டு ஆயிரக் கணக்கில் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்து நசுக்கி, அவ்வமைப்பைத் தடை செய்தது.

இக் கருவியேந்திய படைக்கிளர்ச்சி — பன்முறை சிங்கள இனவெறியால் தங்கள் உரிமைகளையும், உடைமைகளையும், உயிர்களையும் இழந்து, தங்கள் முதலாளியத் தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு நைந்த நிலையில் இருந்த தமிழர்களுக்குப் புத்துணர்வை அளித்தது. அதன் வழி ஈழத் தமிழிளைஞர்கள் கருவியேந்திப் போராடுதலுக்காக அணியப்படும் முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினர். இந்நிலையில்தான் இலங்கையரசு தமிழர்களின் உரிமைகளை முற்றிலுமாகப் பறித்தெடுத்து வாழ்வை நசுக்கும் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றியது. இதனால் தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சி 1972-இல் தமிழீழத் தனிநாடு கோரிக்கையை முன் வைத்தது. 1971-இல் தட்டியெழுப்பப்பட்ட தமிழ் மாணவர் பேரவை இக் கோரிக்கையினால் எழுச்சி கொண்டு இனக் கயவர்களை ஒழிக்கும் அரட்டலியப் போர் முறையை முன்னெடுத்தது. இதனால் ஈழத்தில் அங்குமிங்குமான கருவிப்போர் வெடித்தெழத் தொடங்கியது.

இவ்வாறெழுந்த போரில் நீர்வேலியைச் சேர்ந்த சிவகுமாரன் எனும் வீரத் தமிழிளைஞன் சிங்களக் காவற்படையால் சுட்டுக் கொல்லப் படவே, இனக் கயவர்களை அழித்தொழிக்கும் அரட்டலியப் போர் முறை சிங்களக் காவற் படையை மறைந்திருந்து தாக்கும் கரந்தடிப் (Guerrilla) போர் முறையாக மாற்றம் பெற்றது. இவ்வாறெழுந்த கரந்தடிப் போர் முறையில் (1975-க்கும் 78-க்கும் இடையில்) சிங்களக் கமுக்கக் காவற்படைக் குழுவொன்று முழுவதுமாக அழித்தொழிக்கப்படவே, இலங்கை யரசு படைகொண்டு (Military) ஒடுக்கும் முறையை ஈழப்பகுதிகளில் கையாண்டது. இதனால் இங்குமங்குமாக அதிக அளவில் இனப்படு கொலை-கள் தொடர்ந்தன.

## தமிழீழ விடுதலைப் போராட்டமும், இந்தி(ய)த் தில்லியின் சூழ்ச்சி வலையும்:

1971-இலேயே தமது படைகளைக் கொண்டு சிங்கள இளைஞர்களை இலங்கை அரசின் துணையு-டன் கொன்றொழித்துத் திரும்பிய தில்லியரசு, ஈழப்பகுதிகளில் தோன்றி வளர்ந்த கருவியேந்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்வதைக் கண்டு, அஃது பெரிதானால் தமக்கு எவ்வகையில் அப்போராட்டம் இலங்கையில் தனது மேலாளு-மையை விரிக்க வகை செய்யும் என எண்ணி நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு காத்துக் கிடந்தது. இந்நிலையில் இலங்கை அரசு படைகள் மேற்கொண்டு வந்த இனப்படுகொலை இலங்கை யரசினால் 1983-இல் பெருமளவில் கட்டவிழ்த்து விடப்பட்டது. இப்படுகொலைத் தொடரில் கடந்த காலங்களில் நிகழ்ந்ததை விட அதிக அளவில் உயிரிழப்புக்களையும், உடைமைப் பறிப்புகளையும் ஈழத்தமிழர்கள் எதிர்கொண்டனர். எனவே அவர்கள் ஏதிலி(அகதி)களாக இடம் பெயர்ந்து தில்லிப் பேரரசின் ஆளுகைக்குட்பட்டு அடிமை-யாக இருக்கும் தமிழகத்திற்குள் வந்து குடியேறத் தொடங்கினர். இது 1978-முதலே தொடங்கப் பெற்றிருந்தாலும் 1983-இல் பேராவில் நடந்தது.

— (தொடரும்)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

''.........'' —சங்கராச்சாரி அமைதியானார். அமைப்பாளர் பின்னர் நண்பர் திருப்பதியுடன் திரும்பினர் — தமது பொறுப்பையும் விட்டொழித் தார். அது சரி — நண்பர் திருப்பதி எப்படி இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் — எப்படி அனு-மதித்தார்கள் என்கிறீர்களா?

கடவுள் இட்ட கட்டளையில் எங்கோ தவறு நிகழ்ந்து விட்டது; தென்மொழி அன்பர் புகுந்து விட்டார். — அவ்வளவுதான்!

''தீட்டிய மரத்தில் பதம்பார்க்கும் இந்நிலையை தமிழன் புரிந்து கொண்டால் — சரிதான்!''

— மா. இளங்கோ.

# அறிவியல் எது?

''அறிவியல், தொழில் நுட்ப வெற்றிகளைப் படைத்தல் வேண்டும்; மக்களின் நலனுக்காக அறி வியலார் தங்கள் அறிவைப் பயன்படுத்தல் வேண் டும்''.

''பழைய அறிவியல் வெற்றிகளை நாம் எண்ணிப் பார்த்து, நாட்டின் வளர்ச்சிக்குரிய தேவை-களை நாம் ஆராய்தல் வேண்டும்''

''நாட்டுப்புற மக்களின் சார உணவு, தூய்மை, வீட்டு ஏந்து, விசை, செய்தித் தொடர்பு ஆகிய துறைகளில் பயன் கிடைக்கச் செய்தல் வேண்டும்''

இப்படியெல்லாம் 'மக்கள் நல'த் திட்டங்கள் பற்றிப் புணேயில் நடந்த அறிவியலார் மனை விழாவில் பேசியுள்ளார், இராசீவ்! நமது பாராட்டு தல்கள்!

நாம், இராசீவிடம் ''மக்கள் அறிவியல் துறை யில் மாந்த வள மேன்மையில் அக்கறை உள்ள தாங்கள் அரசியல் நேர்மையுடன், அனைத்தினங் களின் தேசிய நலன்களைப் புறக்கணிக் காதீர்கள்'', என்று சொல்லக் கடமைப் பட்டுள்ளோம்!

ஏனெனில், உரிமை மறுப்பு என்பதே, மக்கள் நல எதிர்ப்பில் முடியும். இதனை இராசீவ் அறிந்தி-ருப்பார் என நம்புவோம்! அதனாலேயே, இராசீவ், இந்தியச் சந்தைமூலம் தொடர்ந்து சுரண்டும் ஆதரவாளர்க்கு உதவியாக, இன நலன்களை எதிர்க் கிறார் எனலாம்!

ஆர்ப்பாட்டமாக, அறிவியல் அறிஞர்க்கு நெறிமுறை பற்றி நெடும்பேச்சுப் பேசும் இராசீவ், சங்கராச்சாரியார்கள் காலடியில் அமர்ந்து அறி-வுரை பெறுதல் என்ன முறையோ நாமறியோம்!

எல்லாரும் மக்கள் தலையில்தான் சிக்கல்கள் விடியும் என்பதை அறிந்தே வைத்துள்ளார்கள். அதனாலேயே, சுரண்டப்படுவோரை அவர்களால் குழப்பமுடிகிறது. குறிப்பாகச் சுரண்டு கின்றவர் களே, மக்கள் நேசர்போல் நடிக்கத் தெரிந்திருக்-கிறார்கள்.

தமிழின ஒற்றுமை அறிவே அறிவியல்!
அடிமைத் தளை நீக்கம் அளிப்பதே அறிவியல்!

— பறம்பை அறிவன்.

வெளிவந்துவிட்டது!
'பாவலரேறு' அவர்களின்
செயலும் செயல்திறனும்
அரிய வாழ்வியல் நூல்!
424 பக்கங்கள் விலை 35 உருபா
பதிவுக் கொடுப்பு (Recorded Delivery)
அஞ்சலில் பெற
விரும்புவோர் 40 உருபா அனுப்புக!
தென்மொழி, சென்னை-5.

Scanned with CamScanner

# விடுதலை சுடர்ந்ததுவே!

நிழலில் செடிஒன்று வளர்கிறது - அதில்
நெருப்பே பூவாய் மலர்கிறது!
குழலில் உரிமைக்குரல் கேட்கும்! — ஒரு
கொம்பும் அதனொடு சேர்ந்தூதும்!

இளைஞர் ஒன்ருய்க் கூடிவிட்டார் — தமிழ்
இனத்தை மீட்கப் பாடிவிட்டார்!
விளைவோ தமிழக விடுதலைதான் — இவ்
வீரரை எதிர்த்தால் கெடுதலைதான்!

தமிழ் நிலம் தனியே பிரிகிறது — அதன்
தணலில் கொடுமை எரிகிறது!
உமிழ்தரும் ஆட்சியும் குலைகிறது — தமிழர்
உரிமை இங்கே விளைகிறது!

தில்லிவல் லாண்மை நடுங்கிடவே - ஆட்சித்
திருடர் கூட்டம் ஒடுங்கிடவே,
வல்லிருள் வாழ்க்கை மாய்கிறது! — ஆளும்
வன்முறை அடியொடு சாய்கிறது!

சாதி ‹ள் ஒடுங்கிச் சமவுடைமை — மத
சாத்திரம் ஒழிந்து பொதுவுடைமை —
தீதறியாமை ஏழ்மையெலாம் — போய்த்
திகழ்ந்திட விடுதலை சுடர்ந்ததுவே!

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏவி விட்டுப் பொதுமக்களுக்கு உண்மைகள் புலப்படாதவாறு மலையளவு விளம்பரங்களைச் செய்யச் சொல்லி மாநாடுகளை நடத்தத் தொடங்கி விட்டனர்.

உண்மையில், இந்தியத் தேசியம் என்பது இந்துமத ஆளுமை, பார்ப்பனியத் தலைமை, முதலாளிய வல்லாண்மை — என்னும் பொருளுடையதே! இவற்றுக்கு மாருக யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், செயலைச் செய்தாலும் அவர்கள் **மக்கள் பகைவர்கள், தேசியப் பகை ஆற்றல்கள், பிரிவினைக் காரர்கள்** என்று கூறுவது நடைமுறை ஆகிவிட்டது.

இந்த அழிம்புகளை யெல்லாம் ஒழிக்க வேண்டும். உழைக்கும் மக்கள் ஒருங்கிணைந்து எழுச்சி கொண்டு எதிர்த்தால்தான் இந்தத் தில்லி வல்லாண்மையை விழ்த்த முடியும்.

இந்திராக் கட்சி பெரும் பெரும் பணமுதலைகளைக் கைக்குள் போட்டுக் கொண்டு அடுத்து வரும் தமிழ்நாட்டுத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கப் பெரும் பெரும் முயற்சிகளையும் தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் செய்து வருகிறது.

தமிழகத்தில் நல்லாட்சி — தமிழின முன்னேற்றம் கருதிய தமிழராட்சி - வரவேண்டுமானாலும், தமிழீழம் அமைய வேண்டுமானாலும், இங்கு இந்திராக் கட்சி எதிர்க்கட்சியாகக் கூட வர விடாத படி தடுத்து நிறுத்த வேண்டும். இல்லெனில் தமிழர்களுக்கு அழிவே நேரும். எனவே தமிழர்கள் அனைத்து நிலைகளிலும் விழிப்பாய் இருக்க வேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும்.



**உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 21**

**ஒரு செயலுணர்வு, அதற்குரிய, மிகப்பலர் உள்ளங்களில் தோன்றி, எழுச்சி பெறும் காலமே, அச் செயலுக்குரிய காலமாகும்!**

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 103.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5. அருணசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்: **நூல் அஞ்சல்**

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணசலத் தெரு, சென்னை-5

TN/MS (C) 657